**மீகஹகிவுல பிரதேச சபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்பித்திருந்ததுடன், அந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 30 திகதி சபையினால் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து மீகஹகிவுல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) கடந்த ஆண்டு கொள்வனவு செய்திருந்த இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்களின் பெறுமதி ரூபா 56,788 தொகையாக இருந்ததுடன், அது கடந்த ஆண்டு ரூபா 697,208 தொகை என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன செலவீட்டிற்காக அரசிறை பங்களிப்பு கணக்கு ரூபா 640,420 தொகையினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோருக்காக ரூபா 4,639,621 இற்கான ஒதுக்கலினை ஆண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்திருக்காமையால் பொறுப்புக்கள் மற்றும் செலவினங்கள் அப்பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த முன்னைய ஆண்டிற்கான ஓய்வூதியப் பங்களிப்பு தொகை ரூபா 809,026 தொகை மீளாய்வாண்டிற்கான செலவு ஒன்று என கணக்கீடு செய்திருந்தமையால் அப்பெறுமதியினால் மிகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களுக்காக வட்டி வருமானம் ரூபா 80,400 கணக்கீடு செய்திருக்காமையால் மிகை அப்பெறுமதியினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. மேலும், நிலையான வைப்புக்களுக்காக பெறவேண்டிய வட்டி ரூபா 48,400 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் ரூபா 880,000 தொகை எனினும் ரூபா 808,000 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் சொத்துக்கள் ரூபா 72,000 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது நூலக புத்தகங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் நன்கொடையாக கிடைத்த புத்தகங்களின் பிரகாரம் ரூபா 134,712 தொகை நூலகப் புத்தகங்கள் கணக்கில் உட்படுத்தியிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 446,151 தொகை எனினும், அதனை ரூபா 262,497 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் ரூபா 183,654 இனால் ஆண்டிற்கான மிகை குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஐ) முன்னைய ஆண்டிற்கான ரூபா 744,876 தொகை முத்திரை கட்டணத்திற்காக ஒதுக்குதல் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்க வேண்டுமெனினும், ரூபா 262,498 தொகை வரவு வைக்கப்பட்டிருந்தமையால் திரண்ட நிதியம் ரூபா 482,378 தொகையால் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 08 கணக்கு விடயங்களில் பொதுப் பேரேட்டு கணக்கின் படி மீதி மற்றும் நிதி செயற்பாட்டுக் கூற்றில் மீதியிடையே ரூபா 5,795,454 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 19,196,168 இற்கான பெற வேண்டிய மீதியில் 5 வருடங்கள் நிலுவையாகக் காணப்பட்ட ஏனைய வருமானங்கள் ரூபா 18,599,325 தொகை, 4 வருடங்களை உடைய முற்பணங்கள் ரூபா 589,093 தொகை, மற்றும் 4 வருடங்களை உடைய மீளளிப்பு செய்யப்பட வேண்டிய மந்திரிமார் படி ரூபா 7,750 தொகையும் அடங்கியுள்ளது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஒரு வருடத்தையுடைய செலுத்த வேண்டிய பவலின கடன் கொடுத்தோர் ரூபா 5,601,753 தொகை அடங்குகின்றது.

**1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை ரூபா 157,382,974 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங் களுடன் தொடர்பு | | | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் | | | |
| | (i) | 147(1) பிரிவு மற்றும் 2016 திசெம்பர் 16 திகதிய 1988 இலக்க வர்த்தமானி | - | மீளாய்வாண்டு ஜனவரி முதல் திசெம்பர் வரையான காலப் பகுதியில் 483 வர்த்தக நிலை யங்களில் இருந்து வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. |
| | (ii) | பிரிவுகள் 158,159(1) | 2,083,735 | மீளாய்வாண்டிற்கான அனைத்து வருமானங்க ளையும் அறவீடு செய்து சபை நிதியத்திற்கு செலவு வைத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபை சட்டத்தின் மற்றும் 1986 மார்ச் 10 திகதிய 392/9 இலக்க வர்த்தமானியின் கட்டளை 67 இன் படி | | | 2014 ஆண்டு முதல் 2017 திசெம்பர் 31 வரையான காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 44 கட்டிட வரைபுகளில் 33 இற்கான இணக்கச் சான்றிதழ்கள் வழங்கியிருக்கவில்லை. |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) | | | |
| | (i) | விதி 214 | | சபையில் காணப்படும் களஞ் சியப் பொருட்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | விதி 218 | | சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த பரிசோதனை செய்து பதிவு செய்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை xviv அத்தியாயம் 1.6 ஆம் பிரிவு | 61,414 | சபையில் சேவையாற்றி சபையில் இருந்து விளகிச் சென்றுள்ள மற்றும் ஓய்வு பெற்றுள்ள 04 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக் கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103(1) | | சபைக்குச் சொந்தமான இயந்திர மொன்றிற்கு ஏற்பட்டிருந்த விபத்து ஒன்று தொடர்பாக ஆரம்ப அறிக்கை சமர்பித்திக்க வில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்ருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 371 | 494,051 | 2014 மற்றும் 2015 ஆண்டுகளின் போது 05 சந்தர்ப்பங்கள் இரண்டு கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கு வழங்கியிருந்த முற்பணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 4,106,235 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,537,025 தொகை ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பான சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 மதிப்பீட்டு வருமனம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரித்த வருமானம் | 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பீட்டு வருமனம் | 2016 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2016 சேகரித்த வருமானம் | 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) வீதவரி மற்றும் வரி | 1,149,040 | 1,149,040 | 996,023 | 153,017 | 1,047,000 | 1,047,000 | 864,880 | 182,119 |
| (ii) வாடகை | 2,627,263 | 2,627,263 | 1,752,916 | 874,346 | 3,191,100 | 3,491,100 | 1,671,907 | 1,819,192 |
| (iii) அனுமதிப் பத்திரக் கட்டணம் | 506,500 | 506,500 | 469,491 | 37,009 | 950,500 | 950,500 | 546,580 | 403,920 |
| (iv) ஏனைய வரு மானங்கள் | 146,655 | 146,655 | 146,655 | -- | 387,219 | 387,219 | 60,576 | 326,643 |
| மொத்தம் | 4,429,458 | 4,429,458 | 3,365,085 | 1,064,372 | 5,575,819 | 5,875,819 | 3,143,943 | 2,731,874 |

### 2.2.2 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு மொத்த சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 4.4 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3.4 மில்லியன் ஆக இருந்தது. எவ்வாறாயினும், வருட இறுதியில் ரூபா 1 மில்லியன் நிலுவை வருமானம் ஒன்று காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிலுவை வருமானம் 61 சதவீதம் வரை குறைந்திருந்தது.

### 2.2.2 வாடகை

(அ) 1980 திசெம்பர் 31 திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 5 வருடங்களுக்கு ஒருமுறை வாடகை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும், 2011 ஆண்டிற்கான பெறுமதி மதிப்பீடுகளின் மீது வாடகை அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) 2015 ஆண்டின் போது வாடகை பெறுமதி மதிப்பீட்டை திருத்தியிருந்த போதிலும், அந்த பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்படாமல் 2011 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் கட்டணம் அறவிடப்பட்டுள்ள காரணத்தினால் ஓர் ஆண்டிற்கு ரூபா 8,433,660 இற்கான வருமானத்தை இழந்துள்ளது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,400,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 446,151 தொகை என்பவற்றை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுபயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலனோம்பு ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) துணை விதிகள்

1987 பிரதேச சட்டத்தின் 126 பிரிவின் பிரகாரம் 30 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 29 விடயங்களுக்காக துணை விதிகள் ஆக்கியிருக்கவில்லை.

#### (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

#### (இ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

சபையினால் திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவம் மேற்கொண்டிருக்காததுடன், 1988 இன் 56 மற்றும் 2000 இன் 53 ஆகிய சட்டங்களினால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல்சார் சட்டத்தின் மற்றும் 1534/18 மற்றும் 2008 பெப்ரவரி 01 ஆம் திகதி, வர்த்தகமானியின் கட்டளைகளுக்கு முரணான சேகரிக்கப்படும் குப்பைகள் 10 ஆம் மைல்தூண் பிரசேதத்தில் திறந்த மலைப் பகுதியொன்றிற்கு போடப்படுகின்றது.

#### (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரழ் தொடர்பாக அறிந்திருக்காமையால் அந்த குறிக்கோளுக்கான உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேச மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டங்கள் 2018 மே 23 வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 130 மற்றும் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 29 இன் பிரகாரம் கிடைக்கக் கூடிய பணம் நாளாந்தம் வங்கியில் இடப்பட வேண்டுமெனினும், வருமான பரிசோதகரினால் 2017 பெப்ரவரி 01 ஆம் திகதி வெளிக்களத்தில் சேகரிக்கப்பட்டிருந்த கடை வாடகை ரூபா 119,690 தொகையினை வங்கியில் வைப்புச் செய்திருக்கவில்லை.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபை பதவியணிகளில் 06 வெற்றிடங்களும் 08 மிகைகளும் காணப்பட்டன.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான டிரக்டர் ஒன்று, டொலமைட் செயற்திட்டத்தின் கட்டிடம் மற்றும் டபள் கப் வண்டி ஒன்று என்பன 05 வருடம் முதல் 10 வருடங்கள் வரையான காலம் விளைவற்ற சொத்துக்கள் காணப்பட்டன.

**3.5 பெறுகைகள்**

**3.5.1 பெறுகைத்திட்டம்**

மீளாய்வாண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

சபையின் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதீட்டு வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகள் உடன் இணக்கஞ் செய்த போது கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | தொங்கல் கணக்கு மீதிகளை தீர்த்திருக்காமை. |
| | | (ii) | கணக்கு மீதிகளுக்காக உரிய அட்டவணைகள் சமர்பித்திருக்கவில்லை. |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்படாமை மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உட்படுத்தாமை. |
| | | (ii) | சில நிலையான சொத்துக்கள் விளைவற்று காணப்பட்டது. |
| | | (iii) | வாகன ஓட்ட அட்டணைகள் பேணியிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | களஞ்சியக் கட்டுப்பாடு | (i) | முறைப்பிரகாரம் பண்டங்கள் களஞ்சியப்படுத்தியிருக்காமை. |
| | | (ii) | பண்டங்கள் வழங்கும் போது வினியோக கட்டளை பயன்படுத்தியிருக்காமை. |
| (ஈ) | கடன் கட்டுப்பாடு | (i) | கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்தியிருக்காமை. |
| | | (ii) | பதிவேடுகள் பேணப்படாமை |
| | | (iii) | கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்படாமை. |
| (உ) | ஒப்பந்த நிருவாகம் | (i) | நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்காக வழங்கியிருந்த முற்பணங்கள் அறவிடப்பட்டிருக்காமை. |
| | | (ii) | கைவிடப்பட்ட செயற்திட்டங்களுக்காக செலுத்தியிருந்த முற்பணங்களை தீர்த்திருக்கவில்லை. |